# முன் மாதிரி முதல் இடைப் பருவத் தேர்வு --- 1

## மேல்நிலை முதலாம் ஆண்டு

## வணிகவியல்

நேரம் : 1.15 மணி மதிப்பெண் : 45

## பகுதி ---- I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 10 × 1 = 10

1. பொருட்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு ------- என்று பெயர்.

   அ) அங்காடி ஆ) சந்தை இ) நாளங்காடி ஈ) அல்லங்காடி

2. தவறான பொருத்தம் எது?

   அ. உழைக்கும் கூட்டாளி --- நிர்வாகம் செய்பவர்
   ஆ. பெயரளவு கூட்டாளி --- கடனிற்கு பொறுப்பேற்பவர்
   இ. உழையா கூட்டாளி --- உறங்கும் கூட்டாளி
   ஈ. இளவர் கூட்டாளி --- 18 வயது நிரம்பியவர்

3. வேறுபட்ட ஒன்று எது?

   அ) பெயர் குறித்த உட்பிரிவு ஆ) செயல் குறித்த உட்பிரிவு
   இ) பொறுப்புக் குறித்த உட்பிரிவு ஈ) நோக்கம் குறித்த உட்பிரிவு

4. வியாபாரத்திற்கு உறுதுணை புரிபவை என்பது ---------

   அ) வியாபாரம் ஆ) விளம்பரம் இ) பண்டகசாலை ஈ) கட்டுமானம்

5. கூற்று (A) : தனிவணிகருக்குத் தேவையான நிதியை அனைவரும் தர முன்வருவர்

   காரணம் (R) : தன் வியாபாரக் கடன்களைத் தீர்க்க தனது சொந்த சொத்துக்களிலிருந்து கடனீந்தோருக்கு தனிவணிகர் செலுத்துவார்.

   அ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது சரியான விளக்கம் அல்ல.

   ஆ) A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது சரியான விளக்கம்

   இ) A சரி ஆனால் R தவறு

   ஈ) A தவறு ஆனால் R சரி

6. மருத்துவர் தொழில் என்பது ________

   அ) வேலைவாய்ப்பு ஆ) தொழில் இ) சிறப்புத் தொழில் ஈ) தனியார் வணிகம்

7. சரியாக பொருந்தாது எது?

   அ) தனிச் சேவை ----- பள்ளிகள்
   ஆ) நிதிச் சேவை ----- காப்பீடு
   இ) பொதுச் சேவை ----- அரசு மருத்துவமனை
   ஈ) தனித்துவச் சேவைகள் ----- மருத்துவ ஆலோசனை

8. ஒப்பந்தம், பதிவு போன்றவை ----------- அமைப்பிற்கு அவசியமில்லை.

   அ) தனியாள் வணிகம் ஆ) கூட்டாண்மை இ) கூட்டுப் பங்கு ஈ) கூட்டுறவுச் சங்கம்

9. பன்னாட்டு நிறுவனங்கள் பின்வருவனவற்றில் யாரால் கட்டுப்படுத்தப்படுகின்றன?

   அ) கிளைகள் ஆ) அதன் துணை நிறுவனங்கள்
   இ) தலைமையகம் ஈ) நாடாளுமன்றம்

10. ராக்டேல் சொசையிட்டி தோற்றுவித்தவர் ---------

அ) ராபர்ட் ஓவென் ஆ) H.C. கால்வெர்ட் இ) டால்மாக்கி ஈ) லம்பேர்ட்

## பகுதி - II

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 16 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 4 × 2 = 8

11. பண்டமாற்றுமுறை என்றால் என்ன?
12. மனித செயல்பாடுகள் என்றால் என்ன?
13. வணிகத்தை வரையறுக்க
14. இந்துச் சட்டத்தின் இரணடு பிரிவுகள் யாவை?
15. அரசு நிறுமம் என்றால் என்ன?
16. கூட்டுறவுச் சங்கத்தின் நிதியை தவறாக பயன்படுத்த முடியுமா? ஆம் எனில் அதற்கான காரணங்களை கூறுக.

## பகுதி - III

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 22 -க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 4× 3 = 12

17. சிறு குறிப்பு வரைக. (அ) தொழில் (ஆ) சிறப்புத் தொழில்
18. இந்துக் கூட்டுக் குடும்பத் தொழில் என்றால் என்ன?
19. தனியாள் வணிகத்தின் மூன்று பண்புகளை விவரி.
20. போக்குவரத்து - சிறுகுறிப்பு வரைக.
21. குறித்த கால கூட்டாண்மை என்றால் என்ன?
22. இன்றைய தொழில் நுட்ப சமுதாயத்தில் வணிகச் செயல்பாடுகள் எவ்வாறு விரிவாக்கம் பெற்றுள்ளன?

Padasalai

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 3 × 5 = 15

23. அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?

( அல்லது )

உற்பத்தித் தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் - ஓர் ஒப்பீடு செய்க

24. பன்னாட்டு நிறுவனத்தின் தீமைகளை விவரி.

( அல்லது )

இந்திய ரிசர்வ் வங்கியின் பாரம்பரியப் பணிகள் யாவை?

25. வணிகத்தின் தடைகள் ஏதேனும் ஐந்தினை எழுதுக.

( அல்லது )

கூட்டாண்மையைப் பதிவு செய்யாவிடில் ஏற்படும் விளைவுகள் யாது?

## முன் மாதிரி முதல் இடைப் பருவத் தேர்வு --- 2

### மேல்நிலை முதலாம் ஆண்டு

### வணிகவியல்

நேரம் : 1.15 மணி மதிப்பெண் : 45

### பகுதி ---- I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 10 × 1 = 10

1. வியாபாரம் மற்றும் வணிகம் ------------ பேரரசில் பொதுவானவையாக இருந்தது.

   அ) பல்லவர் ஆ) சோழர் இ) பாண்டியர் ஈ) சேரர்

2. தவறான கூற்று எது?

   அ) கூட்டுறவு என்பது தன்னார்வ அமைப்புகளாகும்.

   ஆ) கூட்டுறவில் சேவையைவிட இலாபத்திற்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது

   இ) கூட்டுறவு மக்களாட்சி முறையில் அதன் உறுப்பினர்களால் கட்டுப்படுத்தப் படுகிறது

   ஈ) உறுப்பினர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், மேலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கான கல்வி மற்றும் பயிற்சியளிப்பை கூட்டுறவில் வழங்குகிறார்கள்

3. இராபர்ட் ஓவென் எப்போது கூட்டுறவு இயக்கத்தை ஆரம்பித்தார்?

   அ) 1944 ஆ) 1884 இ) 1844 ஈ) 1984

4. கூற்று (A) : பங்குதாரரின் இடர் என்பது பங்குகளின் முகமதிப்பில் செலுத்தப்படாத தொகை மட்டுமே பொறுப்பாகும்

   காரணம் (R) : பங்குதாரரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டதாகும்

   அ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது சரியான விளக்கம் அல்ல.

   ஆ) A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது சரியான விளக்கம்

   இ) A சரி ஆனால் R தவறு

   ஈ) A தவறு ஆனால் R சரி

5. வேறுபட்ட ஒன்று எது?

   அ) தியானம் செய்வது ஆ) விழாக்கள் கொண்டாடுவது

   இ) குல்பி ஐஸ்கிரீம் விற்பது ஈ) கோவிலுக்குச் செல்வது

6. பொருத்துக:

   1. ஒரு பங்கு ஒரு வாக்கு -- a. வரையறு பொறுப்பு
   2. பங்குதாரரின் பொறுப்பு -- b. பங்குகளை மாற்றுவது எளிது
   3. நிறுமம் -- c. நிறுமத்தின் வாக்கெடுப்பு தத்துவம்
   4. பொது நிறுமம் -- d. சட்டத்தால் உறுவாக்கப்பட்ட நபர்

   அ) c b a d ஆ) d a b c இ) c d a b ஈ) c a d b

7. அதிக அளவு அபாயத்தைக் கொண்டது ---------

   அ) உற்பத்தித் தொழில் ஆ) வணிகம் இ) வியாபாரம் ஈ) இவை அனைத்தும்

8. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது --------------

   அ) ஒப்பந்தத்தால் ஆ) கூட்டாளிகளிடையே உறவு

   இ) அரசின் வழிகாட்டல் ஈ) நட்பின் அடிப்படையில்

9. நிறுமத்தின் இயக்குநரை கீழகண்டவற்றுள் யார் தேர்ந்தெடுக்கிறார்கள்?
அ) கடனீந்தோர் ஆ) கடனாளர் இ) கடனீட்டு பத்திரதாரர் ஈ) பங்குதாரர்கள்

10. நிறுவனத்திற்கும் வெளிநபருக்கும் உள்ள உறவு முறையைப் பற்றி குறிப்பிடுவது எது?
அ) தகவலறிக்கை ஆ) சங்க நடைமுறை விதிகள்
இ) அமைப்பு முறையேடு ஈ) கூடடுருவாக்கச் சான்றிதழ்

## பகுதி - II

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 16 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 4 × 2 = 8**

11. நாளங்காடி என்றால் என்ன?
12. தனியாள் வணிகத்தில் எவ்வாறு இரகசியம் காக்கப்படுகின்றன?
13. கர்த்தா என்பவர் யார்?
14. கூட்டுறவு அமைப்பு என்றால் என்ன?
15. இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார்?
16. ஒரு நாட்டில் பதிவு செய்யப்பட்டு ஒன்றுக்கு மேற்பட்ட நாட்டில் தொழில் நடத்திக் கொண்டிருக்கும் பன்னாட்டு நிறுவனங்களின் பெயரைக் குறிப்பிடவும். ( ஏதேனும் 4 )

## பகுதி - III

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 22 -க்கு கட்டாயம் விடையளிக்கவும். 4× 3 = 12**

17. பிரித்தெடுக்கும் தொழிற்சாலை மற்றும் மரபுத் தொழிற்சாலையை வேறுபடுத்துக.
18. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?
19. இந்து கூட்டுக் குடும்பத்தில் கர்த்தாவின் பொறுப்பை விவரி.
20. கூட்டு மற்றும் தனி பொறுப்பு என்றால் என்ன?
21. பட்டய (அ) சாசன நிறுமம் என்றால் என்ன?
22. கூட்டாளிகளின் கடமைகள் யாது? (ஏதேனும் 6)

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3 × 5 = 15**

23. கூட்டுறவின் கொள்கைகள் என்ன? (ஏதேனும் 5)

( அல்லது )

தனியாள் வணிகத்தின் குறைபாடுகளில் ஐந்தினை விவரி.

24. பொருளாதாரச் செயல்பாடுகளுக்கும் மற்றும் பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகளுக்கும் உள்ள வேறுபாடுகளை விவரி.

( அல்லது )

பொதுக் கழகத்தின் நன்மைகளை விவரி.

25. வணிகத்திற்கு உறுதுணையானவற்றைச் சுருக்கமாக விவரி (ஏதேனும் 5 )

( அல்லது )

கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கம் யாது?